**இலங்கை கிழக்குப் பல்கலைக்கழக சுகாதார பராமரிப்பு விஞ்ஞான பீடத்திற்கான கட்டிடத்தொகுதி செயற்திட்டம் - 2018**

---

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழக சுகாதார பராமரிப்பு விஞ்ஞான பீடத்திற்கான கட்டிடத்தொகுதி செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டம் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அராபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைத் நிதியத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 மார்ச் 24 ஆந் திகதிய 940 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் அமுல்படுத்தப்படுகின்றது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்ட கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னால் உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய நகர திட்டமிடல், நீர் விநியோகம் மற்றும் உயர்கல்வி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகக் காணப்படுகின்றது. மட்டக்களப்பில் புதிய சுகாதார பராமரிப்பு விஞ்ஞான பீடத்தினை நிர்மாணிப்பதனூடாக மக்களின் வாழ்க்கைத் தரத்தினை முன்னேற்றுதல் மற்றும் சமூகத்திற்கு தரமான சுகாதார பராமரிப்பு சேவைகளினை வழங்குதல் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களாகக் காணப்படுகின்றன. செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 6,473.28 மில்லியனாகக் காணப்பட்டதுடன், அதில் ரூபா 5,073.10 மில்லியனுக்குச் சமமான குவைத் தினார் 10 மில்லியன், அராபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைத் நிதியத்தினால் நிதியளிப்புச் செய்யப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளினை 2016 ஆகஸ்ட் 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 மே 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

### 1.3 அபிப்பிராயம்

2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினை மற்றும் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்கனுக்கான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத்

தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு செயற்திட்டத்தின் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டது.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயல்முன்னேற்றம்

கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், கட்டிடத்தின் நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தம், பட்டியல்படுத்தப்பட்ட 2018 சனவரி 28 ஆந் திகதியிலிருந்து 17 மாதங்கள் கடந்த பின்னர் 2019 மே 09 இல் மாத்திரம் அளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிர்மாண வேலைகள் 2019 மே 27 இல் மாத்திரம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2 குறைப்பயன்பாட்டுடைய வளங்கள்

| கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| செயற்திட்டத்தினால் அமுல்படுத்தப்பட்ட பௌதீக வேலைகளின் தாமதமான செயல் முன்னேற்றத்தின் விளைவொன்றாக, செயற்திட்டத்தின் 04 மூலக்கூறுகளின் கீழ் கடனளிப்பு முகவரினால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 288.70 மில்லியன் தொகையான ஒதுக்கீடுகளில் ரூபா 31.30 மில்லியன் தொகையொன்று மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | செயற்திட்ட காலப்பகுதியின் இறுதியில் நிதிகளின் ஒட்டுமொத்த ஒதுக்கீட்டினையும் பயன்படுத்த முடியாது போகும். | பதிலளித்திருக்க வில்லை. | முறையான நிதித் திட்டம் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தல் வேண்டும். |

### 2.3 கட்டுப்பாட்டு முறைமை

| கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2016 மார்ச் 24 இன் 2016/01 ஆம் இலக்க சுற்றறிக்கையினால் வேண்டப்பட்டவாறு, வரிசை அமைச்சு, நிதி அமைச்சு மற்றும் செயற்திட்ட கண்காணிப்பு அலகிலிருந்து 04 உறுப்பினர்களினை நியமிப்பதற்குப் பதிலாக வரிசை அமைச்சு, அமுல்படுத்தல் முகவர், நிதி அமைச்சு, செயற்திட்ட கண்காணிப்பு அலகு மற்றும் ஆலோசனையாளரின் ஊழியர், ஆகியவற்றிலிருந்து 13 உறுப்பினர்களினை செயற்திட்ட வழிகாட்டல் குழு உள்ளடக்கியிருந்தது. | பிரமாணங்களுடன் இணங்கியிருக்க வில்லை. | பதிலளித்திருக்க வில்லை. | வினைத்திறனான முறையில் தீர்மானங்களினை எடுக்கக்கூடியவாறு வழிகாட்டல் குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைக்கப்படல் வேண்டும். |